செய்தி வெளியீடு எண்: 20 நாள்: 11.01.2013

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மாஅவர்களின் உத்திரவின் பேரில் சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தில் 11.01.2013 அன்று சிறப்பு முன் பதிவு மையங்களை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.வி.செந்தில் பாலாஜி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்திரவின் பேரில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னையில் இருந்து பிற மாவட்டங்களுக்கு 5612 சிறப்பு பேருந்துகள் 11.01.2013 முதல் 13.01.2013 வரை இயக்கப்பட உள்ளது.

பொதுமக்கள் நலன் கருதி கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தில் 16 சிறப்பு முன் பதிவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அம்மையங்களை திறந்து வைத்த மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கோயம்பேடு வணிக வளாகம் அருகில் சிறப்பு பேருந்துகளை நிறுத்தம் செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பேருந்து நிலையத்தினையும், தனியார் பேருந்துகளின் இயக்கங்களை கண்காணிப்பதற்காக போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு குழுக்களின் பணிகளையும் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது போக்குவரத்துத்துறை செயலாளர் திரு.பிரஜ்கிஷோர்பிரசாத்.இ.ஆ.ப., மற்றும் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் மேலாண் இயக்குநர் திரு.பி.பி.ராஜேந்திரன், அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தின் மேலாண் இயக்குநர் திரு.ஜி.மோகன் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம்–விழுப்புரம் கோட்டத்தின் மேலாண் இயக்குநர் திரு.எஸ்.பூபதி ஆகியோர் உடன் இருந்தனர்.

வெளியீடு
இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்பு துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை–600 009.